RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s137

# தொல்காப்பியம் கூறும் அகப்பொருள் கோட்பாடு

**சு. தீபலட்சுமி** [அ, *]

[அ] தமிழாய்வுத் துறை, தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), பெரம்பலூர்-621212, தமிழ்நாடு, இந்தியா

# Tholkappiyam's Theory of Love-Theme

**S. Deepalakshmi** [a, *]

[a] Department of Tamil, Dhanalakshmi Srinivasan college of Arts & Science for Women (Autonomous), Perambalur-621212, Tamil Nadu, India

* Corresponding Author: tamildeepa.s@gmail.com

Received: 23-05-2022
Revised: 17-08-2022
Accepted: 08-09-2022
Published: 19-11-2022

**ABSTRACT**

To understand the status of life messages in Tamil grammar, the information on the studies of premarital relationships and female chastity through Agatthinai constitutes the best data in this article. In grammatical texts, there is an abundance of information on premarital relationships and female chastity in the love-theme (Agapporul) subject areas. Literature involves grammar within itself. Grammar texts are interpreted as describing the nature of literary material. Literary principles can be seen more clearly and easily in grammar texts than in broader literature. It becomes important to look at the theory and explanations of the agathinai messages as stated in the grammar books before examining them from the literature. The primary purpose of this article is to see how Tholkappiyar formulated the principles and definitions of the Agatthinai. How the ancient Tamils followed these premarital relationships and female chastity ideas can be used for future research. In that Tholkapiyam, love-theme (Agapporul), a treatise that deals with the traditions of love-theme (Agathinai), events related to love, kinds of Agathinai depending on types of love, people of Agathinai, the structure of Agathinai songs, etc., are mostly spoken of in Porulathikaram (the part that deals with the subject matter). It is not known to what extent they have been followed in Sangam literature. The purpose of prioritizing the Sangam literature here is that Tolkappiyar has grammaticalized the messages that appeared before and after the Sangam literature. Thus, the Sangam literature contains all of the thoughts on life that are not known in Tolkappiyam

**Keywords:** Agapporul, Love, Tholkapiyam, Agathinai, Sangam literature

## முன்னுரை

தமிழ் இலக்கணங்களின் மூலமாக இருக்கக் கூடியது தொல்காப்பியம். அத்தொல்காப்பியத்தில் அகப்பொருள், அகத்திணை மரபுகள், அகத்திணை நிகழ்வுகள், அகத்திணை உறுப்புகள், அகத்திணை மாந்தர்கள் அம்மாந்தர்களின் கூற்றுகள், அகப்பாடல்களின் அமைப்புகள் முதலியனவெல்லாம் பொருளதிகாரத்தில் பெரும்பான்மையாக பேசப்படுகின்றன. அவற்றை சங்க இலக்கியங்களில் எந்த அளவிற்கு பின்பற்றியுள்ளது என்பது தெரியவில்லை. இங்கு நாம் சங்க இலக்கியத்தை முதன்மைப்படுத்துவதன் நோக்கம் என்னவெனில் சங்க இலக்கியங்களுக்கு முன்பும், பின்பும் தோன்றிய செய்திகளைக் கொண்டு தொல்காப்பியர் இலக்கணப்படுத்தியுள்ளார். இதனால் தொல்காப்பியத்திற்குள் அறியப்படாத வாழ்வியல் சிந்தனைகள் அனைத்தும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

தொல்காப்பியத்திற்கு பின் வந்த இலக்கண ஆசிரியர்கள் தொல்காப்பியத்தை முதன்மையான மூலமாகக் கொண்டே எழுதினர் (Thirupathi & Velmurugan, 2021). கோட்பாட்டுக்கு உள்ளே இருந்து அதன் தன்மைகளை ஆய்தல் என்பதும் தேவையாக உள்ளது. இங்கு தொல்காப்பியர் அகப்பொருள் பற்றிய செய்திகளை எவ்வாறு வெளிப்படுத்துகிறார் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திணைப் பாகுபாடு

“திணை அகம், புறம், என இருவகைப்படும். அகப்பொருளாவது போக நுகர்ச்சியாகலானும் அதனால் ஆய பயன் தானே அறிதலின் அகம் என்றார்” இளம்பூரணார். அகம் எனப்பட்ட கலைச் சொற்களுக்கான பொருளை தெளிவுபடுத்தியுள்ளார். அகம் பிறர்க்கு வெளிப்படா உள்ளத்துணர்வாகும்.

அகத்தை களவு, கற்பு என்று பாகுபடுத்தி விளக்குவது போல் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை எனப்பாகுபடுத்தி ஆராயவில்லை. கைக்கிளை, பெருந்திணை இரண்டையும் ஒவ்வொரு நூற்பாவில் விளக்கிவிட்டு ஏனைய ஐந்து திணைகளையும் முதல், கரு, உரிப்பொருளின் அடிப்படையில் விளக்குகிறார்.

“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே

நுவலும் காலை முறை சிறந்தனவே

பாடலுள் பயின்றவை நாடும் காலை”

என அகத்திணைப் பாடல்களுக்கான முப்பொருள் குறிப்பிடப்பட்டுள்ளன (Thirugnana Saambantham, 2020).

## களவியல்

களவியல், கற்பியல் எனும் இரு இயல்களும் ஏழு திணைகளுக்கான பல்வேறு பொது இயல்புகளைப் பேசுகின்றன. அகத்திணையியலின் தொடர்ச்சியாய் நடுவண் ஐந்திணைகளுக்கான பல்வேறு பொதுநிலை செயல்பாடுகளையும் குறிப்பிட்ட திணை சார்ந்த செயற்பாடுகளையும் விவரிப்பனவாக இவ்விரு இயல்களும் அமைக்கப்பட்டுள்ளன. எனவே இவ்விரு இயல்கள் தான் களவு, கற்பு எனும் இருவகைக் கைக்கோள்களில் இடம் பெறும் அகத்திணை மாந்தர்களின் ஒழுகலாறுகளை முழுமையாகப் பேசுவனவாக அமைந்துள்ளன. எனவே இவை அகத்திணை கோட்பாட்டில் முக்கிய இடம் பெறத்தக்கனவாக உள்ளன.

பிறர் பொருளை அவர் அறியாமல் எடுத்துக்கொள்ளும் களவு (திருட்டு) என்பதைப் போலன்றி மனமொத்த இருவரும் தத்தம் தாய், தந்தையர் அறியாதபடி மறைந்து நடக்கும் நடத்தை என்பதால் இது களவு எனப்பட்டது என்கிறார் நச்சினார்க்கினியர். எனவே களவு எனபதற்குப் பிறர் அறியாதபடி மறைந்து ஒழுகும் ஒழுக்கம் என்பது பொருளாகிறது.

களவு என்பது ‘காதலர் இருவர் தாமே அன்புக் கொண்டு பிறர் அறியாமல் காதலிக்கும் ஒழுக்கம்’ என்கிறது தொல்காப்பிய சிறப்பகராதி. “மறைந்த ஒழுக்கம் என்று அவர் களவைக் கூறுவதைக் கொண்டு பெற்றோர்கள் அறியாமால் காதலர்களாக ஒழுகுவது எனக் கூறலாம் என்கிறார் ப. அருணாச்சலம்.

“மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்

துறந்த ஒழுக்கம் கிழவோர்க்கு இல்லை”

எனும் நூற்பாவில் தொல்காப்பியரே, “மறைந்தவொழுக்கம்” எனக் களவை குறிப்பிட்டுள்ளார். இதற்குக் களவொழுக்கம் என இளம்பூரணார் உரையில் கூறப்பட்டுள்ளது (Ilampooranar, 2005).

கைக்கோள் பற்றிய செய்யுளியலில் ‘காமப்புணர்ச்சியும்’ எனும் நூற்பாவில் வரும் ‘மறையென மொழிதல் மறையாராறே’ எனும் வரியில் வரும் ‘மறை’ என்பதற்கு இளம்பூரணார், ‘இதனுள் களவென்னாது மறை என்றதனான் இது தீமை பயக்கும் களவன்மை கொள்க’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் மறை என்பதும் களவு என்பதும் ஒன்றேயாகும். எனவே பிறர் அறியாதவாறு ஒழுகும் காதல் ஒழுக்கமே ஈண்டு களவு எனப்பட்டுள்ளது.

## கற்பியல்

ஒருவனுக்கு ஒருத்தி என வாழும் பெண்ணின் மனப்பாங்கு என்று வழக்கமாக் கருதப்படும் பொருளில் தொல்காப்பியர் கற்பியலில் குறிப்பாக முதல் நூற்பாவிலும் இயல் தலைப்பிலும் கற்பு என்ற சொல்லைக் கையாளவில்லை. இதை கற்பியலின் முதல் நூற்பாவே வெளிப்படுதததுகிறது.

"கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்

கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே"

இந்நூற்பாவில் பெண்ணைக் கொடுக்கும் இயல்பினை உடையவராகிய தாயும், தந்தையும் சடங்கோடு பொருந்திய நிலையில் பெண்ணைக் கொடையாகக் கொடுக்கும் இயல்பினை உடைய தலைவனுக்குத் தலைவியைக் கொடுப்பது என்பதே கற்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (Ilampooranar, 2005).

பெற்றோர் தலைவன் ஆகியோர் கற்பித்த வழி தலைவி ஒழுகுவதும் தலைவன் இல்லறம் நடத்துதலும் கற்பு என விளக்கியிருந்தாலும் இவை தொல்காப்பிய வரையறைகளோடு பொருந்தி வரவில்லை. கற்பும் காமும் நற்பால் ஒழுக்கமும் எனக் குறிப்பிடும் இடத்தில் கற்பு எனும் சொல்லைக் கையாண்டதற்கும் கற்பியலின் முதற்நூற்பாவில் கையாண்டதற்கும் வேறுபாடு உள்ளது. பெற்றோர் கொடுப்பக் கொள்வதையும் மறை வெளிப்பட்ட பின்னர் மனம் செய்து கொள்வதையுமே கற்பு எனக் குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியர்.

"அம்பலும் அலருங் களவுவெளிப் படுத்தலின்

அங்கதன் முதல்வன் கிழவனாகும்"

என அம்பல், அலர் என்பன களவை வெளிப்படுத்தும் கருவிகளாகக் காட்டப்பட்டுள்ளது (Ilampooranar, 2005).

"களவும் கற்பும் அலர் வரைவு இன்றே" என அலர் கற்பிற்கும் களவிற்கும் உரியதாகக் காட்டப்பட்டுள்ளது (Thirugnana Saambantham, 2020). இவ்வலர் தலைவன், தலைவியரின் காமம் சிறந்ததற்கு காரணமாக அமைவது என்பதையும் குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியர். எனவே, அலர் களவு, கற்பு எனும் இருவகைப் பாடல்களாலும் பேசப்படுவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. எனவே அவரை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு களவுப்பாடல் எனப் பாடலின் கைகோளைத் தீர்மானித்து விட முடியாது.

தொல்காப்பியம் கவிதையின் பாடுபொருளைத் திணை என்னும் மையக் கருத்தாக்கத்தின் அடிப்படையில் அகத்திணை, புறத்திணை எனும் இருபெரும் பிரிவாகப் பிரித்துக்காட்டுகின்றது. mகம், புறம் ஆகிய இரண்டு கருத்தாக்கங்களும் இருவேறுபட்ட நடத்தை முறைகளின் தொகுப்பை அடையாளப்படுத்துபவை. வெவ்வேறு நிலத்திலும் பொழுதிலும் நடத்தை முறைகள் வேறுபடுவதால் அவை குறிப்பிட்டச் சூழலின் அடிப்படையாகக் கொண்ட ஒழுங்கமைவாக வரையறுக்கப் பெற்று திணை எனும் கருத்தாக்கமாக முன்வைக்கப் பெற்றுள்ளது. இந்த ஒழுங்கமைவு மனித நடத்தை முறைகளை அகம் சார்ந்தவை என்றும் புறம் சார்ந்தவை என்றும் பிரித்து காட்டுகிறது.

அகம் என்பது தனிப்பட்ட வாழ்க்கை சார்ந்த நடத்தை முறைகளைக் குறிப்பதாகும். இது பொதுத்தளத்தில் பேசுவதற்கு உரியதல்ல. ஆனால், அதுவே இலக்கியத்தில் பாடுபொருளாக அமையும் போது எவ்வாறு பேசப்பட வேண்டும் என்பதையும் தொல்காப்பியம் வரையறுத்துக் காட்டுகிறது.

"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்

சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்”

இந்நூற்பாவில் இளம்பூரணார், அகத்திணையுள் கைக்கிளை, பெருந்திணை ஒழிந்த ஐந்திற்கும் உரியவாகிய நிலமும், காலமும் கருப்பொருளும் அன்றி மக்களைப் பற்றி வரும் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்று சொல்லப்பட்ட ஐந்து பொருண்மையும் ஒருவரின் பெயரை குறிப்பிட்டு கூறுதல் கூடாது (Ilampooranar, 2005; Thirugnana Saambantham, 2020; Sivalingan, 1995).

தொல்காப்பியர் நிலத்திற்குரிய ஒழுக்கங்களை உரிப்பொருளாகச் சுட்டுகிறார். ஒவ்வொரு திணைக்கும் உரிப்பொருள் தனித்தனியே சுட்டப்படுகின்றன.

“புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்

ஊடல் இவற்றின் நிமித்தமும் என்றிவை

தேருங்காலை திணைக்கு உரிப் பொருளே”

ஐந்து ஒழுக்கங்களை தொல்காப்பியர் திணைக்குரிய உரிப்பொருளாக அடையாளப்படுத்துகிறார். இவ்வுரிப் பொருள்கள் தனித்தனியே எந்தெந்த நிலத்திற்குரியவை எனச் சுட்டப்படவில்லை. குறிஞ்சி முதலான ஐவகை நிலத்திற்கு ஒவ்வொரு உரிப்பொருளை உரையாசிரியர்கள் முதலானோர் அடையாளப்படுத்திக் கொண்டனர் (Thirugnana Saambantham, 2020).

இவ்வொழுக்கங்களுக்கும் நிலங்களுக்குமிடையிலான உறவு என்ன என்பதை தொல்காப்பியர் வரையறுக்கவில்லை. ஒழுக்க முறைகள் திணை கோட்பாட்டோடு தொடர்புடையது என்றும் ஒவ்வொரு ஒழுக்க முறையும் ஒரு நிலப்பகுதிக்கு தேவையானது என்றும் அக்காலச் சமுதாயத் தேவைகளுக்கு இவ்வொழுக்க முறைகள் தொடர்புடையன என்றும் இத்தொடர்புகளாலேயே இலக்கிய மரபுகள் தொல்காப்பியர் வருணித்த முறையில் வளர்ச்சி பெற்றன என்றும் இராகவையங்கார் குறிப்பிடுகிறார்.

இராகவையங்காரின் விளக்கம் நிலத்திற்கும் ஒழுக்கத்திற்குமான தொடர்பைக் காட்டுகின்றது. நிலங்களுக்கு உரியதாகச் சொல்லப்படும் ஒழுக்கங்களான புணர்தல், இருத்தல், பிரிதல், இரங்கல், ஊடல் ஆகிய ஐந்து ஒழுக்கங்களையும் நிலம் சார்ந்தவையாகப் பொதுமைப்படுத்த இயலாது. இவை குறிப்பிட்ட காலக்கட்டத்தின் சூழல் சார்ந்த நடத்தை முறைகளாகும். முல்லையின் ஒழுக்கமான இருத்தலும் இருத்தல் நிமித்தமும் போர்ச் சூழலின் காரணமாகத் தோன்றும் குறிப்பிட்ட நடத்தை முறைகள் என்பதை முல்லைத் திணைப் பாடல்களின் வழி அறியலாம். இவ்வாறெனில் உரிப்பொருள் என்பது குறிப்பிட்ட சமூகச் சூழல் சார்ந்த நடைமுறையாகக் கொள்ளப்பெற்று அச்சூழலை எதிர் கொள்ளும் நிலத்தோடு அடையாளப்படுத்தப் பெற்றது எனலாம். இக்குறிப்பிட்ட சூழல் அல்லாதபோது உரிப்பொருள் வேறுபடலாம். இதன் காரணமாகக் கரு, உரி ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று மாறுபட்டு வருவதற்கான வாய்ப்புகளும் உண்டு. இதனை தொல்காப்பியர் ஏற்றுக் கொள்கின்றார்.

திணையின் கூறுகள் இறுக்கமானவை அல்ல. அவை சூழல்களின் அடிப்படையில் மாறலாம் அல்லது ஒன்றோடு ஒன்று மாறுபட்டு வரலாம். இது திணைமயக்கம் என அடையாளப்படுத்தப்படுகின்றது.

“திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே

நிலன்ஒருங்கு மயங்குதல் இல்லென மொழிப

புலன்நன்கு உணர்ந்த புலமை யோரே"

மேற்குறித்த நூற்பா திணை மயக்கத்தை ஒத்துக்கொள்கிறது (Thirugnana Saambantham, 2020). திணை மயக்கம் குறித்து தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள விதிகளை உரையாசிரியர்கள் முதல் தற்காலத் திறனாய்வாளர்கள் வரை பல்வேறு வழிகளில் விளக்கியுள்ளனர். இவ்விளக்கங்கள் ஒத்தக் கருத்து இல்லை என்பதை உணரலாம். திணை நிலத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை ஏற்றுக் கொள்வதாயின் பண்பாட்டுக் கலப்புக்கு வாய்ப்புண்டு என்பதை இந்நூற்பா உணர்த்துகின்றது எனப்பொருள் கொள்ளலாம்.

## முடிவுரை

தமிழ் இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் மிகப் பழமையானது என்பதை நாம் அறிவோம். தொல்காப்பியத்திற்கு முன் வழக்கிலிருந்த மொழி மரபுகளையும், இலக்கிய மரபுகளையும் ஆராய்ந்து அவற்றின் தனித்தன்மைகளையும் பொதுப்பண்புகளையும் வரையறை செய்து அது விளக்கியுள்ளது. இவ்வாறு விளக்கும் போது தொல்காப்பியத்திற்கு முன் தோன்றிய இலக்கணங்களில் தொடர்ச்சி அவ்வாறே இருக்கும் இடங்களில் அவற்றை மரபு என நெறிப்படுத்திக் காட்டியுள்ளது. தமிழ்மொழி என்னும் அடையாளத்தின் வழி பல்வேறு இனக்குழுக்களையும் நிலங்களையும் மரபுகளையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்திக் கட்டமைக்க முயற்சித்துள்ளது. இவற்றில் தொல்காப்பியரின் அகக்கவிதையியல் மரபில் மிக முக்கியமான இடத்தப் பெறுவனவாக இருப்பவை அகத்திணையியலில் இடம் பெறும் கருத்துக்களேயாகும்.

## References

Ilampooranar, (2005) Tholkappiyam Porulathikaram, Saratha Pathipagam, Chennai, India.

Sivalingan, A. (1995) Tolkappiyam-Porulatikaram uraivalam, International Institute of Tamil Studies, Chennai, India.

Thirugnana Saambantham, S. (2020) Tholkappiyam Porulathikaram, Kadhir Pathippagam, Thiruvaiyaru, India.

Thirupathi, D., Velmurugan P. (2021) Tolkappiyam's courtship and exogamy, International Research Journal of Tamil, 4(1), 1-10. https://doi.org/10.34256/irjt2211

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License